பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

13 10 2025 MONDAY 12.40 PM

## தலைப்புச் செய்திகள்

1. கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் மூலம் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. கரூர் கூட்டநெரிசல் சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

3. உற்பத்தி அடிப்படையிலான பொருளாதாரம் மூலம், இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

4. காஸாவில், ஹமாஸ் தரப்பிலிருந்து இஸ்ரேலை சேர்ந்த 7 பிணைக்கைதிகள் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

5. ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா பட்டம் வென்றார்

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் மூலம் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரதமர் திரு நரேந்திர மோடி நான்காண்டுகளுக்கு முன்பு தொடங்கிவைத்த இந்த திட்டம் உள்கட்டமைப்புத்துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு அமைச்சகங்கள், மாநில அரசுகள், துறைகள் இடையே செயல்பாடுகளை ஒருங்கிணைத்து திட்டங்களை விரைந்து முடிக்க இந்த திட்டம் வழிவகுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

உற்பத்தி அடிப்படையிலான பொருளாதாரம் மூலம், இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சியடைந்த இந்தியா Buildathon நிகழ்ச்சியை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், உலக பொருளாதாரம் மற்றும் அறிவுசார் துறையில் இந்தியா முன்னணி நாடாக உருவெடுத்து வருவதாக கூறினார்.

இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கு தொலைநோக்கு பார்வை, நவீன தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பத்தின்

அடிப்படையிலான முயற்சிகளை மேற்கொள்வது அவசியம் என்று கூறிய திரு தர்மேந்திர பிரதான், வருங்காலத்தில் நமது மாணவர்கள் இதற்கு தீர்வு காண்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாடு முழுவதிலும் இருந்து 3 லட்சம் பள்ளிகளை சேர்ந்த 25 லட்சம் மாணவர்களும், ஆசிரியர்களும் இந்த Buildathon நிகழ்ச்சியில் காணொலி மூலம் பங்கேற்றனர்.

<<<<<>>>>>

தமிழகத்தின் கரூரில் கூட்டநெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, தமிழக வெற்றிக்கழகம், உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு ஜெ கே மகேஷ்வரி, திரு N V Anjaria ஆகியோர் அடங்கிய அமர்வு, உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி திரு Ajay Rastogi தலைமையிலான குழு இந்த விசாரணையை மேற்பார்வை செய்யும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேலும், தமிழக பிரிவு ஐ பி எஸ் அதிகாரிகளும் இந்த விசாரணையில் இடம்பெறுவார்கள் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

பீகார் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டத் தேர்தல் நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

*வேட்புமனு தாக்கல் வரும் 20-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.*

*மனுக்களை திரும்பப்பெற 23-ஆம் தேதி கடைசி நாளாகும்.*

*வேட்புமனு தாக்கல் காலை 11 மணிக்கு தொடங்கி, பிற்பகல் மூன்று மணிவரை நடைபெறும்.*

*மேற்கு சம்பாரன், Sitamarhi, Madhudani உள்ளிட்ட 20 மாவட்டங்களை சேர்ந்த 122 தொகுதிகளில் அடுத்த மாதம் 11-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.*

*இரண்டு கட்டங்களில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 14-ஆம்தேதி எண்ணப்படும்.*

*<<<<<>>>>>*

*பீகார் சட்டப்பேரவையில் முதல் கட்டத் தேர்தலுக்கான பிஜேபியின் இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று மாலை வெளியிடப்படும் என்று அக்கட்சியின் மாநிலத்தலைவர் டாக்டர் திலிப் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.*

*பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு சுமூகமாக நடைபெற்றதாக தெரிவித்தார்.*

*ஐக்கிய ஜனதாதளம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் பட்டியலும் இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*<<<<<>>>>>*

தெலங்கானா மாநிலம் *Jubilee Hils*, ராஜஸ்தான் மாநிலம் *Anta* உள்ளிட்ட எட்டு சட்டப்பேரவைத் தொகுதிகளில் அடுத்த மாதம் 11-ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

ஜம்மு காஷ்மீர் மற்றும் ஒடிஷா சட்டப்பேரவை இடைத்தேர்தலுக்கு வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசிநாள் வரும் 20-ஆம் தேதியாகும்.

பிற இடங்களில் மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21-ஆம் தேதி கடைசிநாளாகும்.

<<<<<>>>>>

இந்தியாவை, போதைப் பொருள் புழக்கம் இல்லாத நாடாக மாற்ற, *ISKCON* அமைப்பு மேற்கொண்டுள்ள முயற்சிகள், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான மக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் என்று, மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், இந்த அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இளைஞர் விழாவில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், லட்சக்கணக்கான மக்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து மீட்கும் நோக்கத்துடன் இந்த முயற்சி தொடங்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

இதன்படி, 15 ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்கள், போதைப்பொருள் பழக்கத்தைக் கைவிட உறுதி ஏற்றிருப்பதாகவும், டாக்டர் மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே அமைதி உடன்பாடு அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, காஸாவில் உள்ள சர்வதேச செஞ்சுலுவைச் சங்கத்தின் மூலமாக ஹமாஸ் தரப்பிலிருந்து இஸ்ரேலை சேர்ந்த 7 பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 13 பேரை விடுவிக்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தை சேர்ந்த 2 ஆயிரம் பேர் இஸ்ரேல் சிறைகளில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, ஆர்வத்துடன் காஸா பகுதியில் மக்கள் திரண்டுள்ளனர்.

எகிப்தில் உள்ள Sharm el SheiKh-ல் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டில் அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கலந்துகொள்வதற்காக சென்றுள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே காஸாவில் நடைபெற்று வந்த தாக்குதல்கள் நிறைவுபெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், ஷர்ம் எல் ஷேக் சென்றுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தின், நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த கோடியக்கரையில் உள்ள பறவைகள் சரணாலயத்தில் ஆண்டுதோறும் செம்படம்பர் முதல் மார்ச் மாதம் வரை பல்லாயிரக்கணக்கான பறவைகள் வந்த வண்ணம் உள்ளன.

பறவைகளை சுற்றுலாப்பயணிகள் கண்டு ரசிப்பதற்காக உயர்மட்ட கோபுரங்கள் மற்றும் தொலைநோக்கி உள்ளிட்ட வசதிகளை வனத்துறையினர் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – செல்வன் ஜெபராஜ் - 46 Sec. )*

<<<<<>>>>>

முன்னாள் ரயில்வே அமைச்சரும், ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவருமான திரு லாலு பிரசாத், அவரது மனைவி திருமதி ராப்ரி தேவி, அவரது மகன் திரு தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் மீது IRCTC முறைகேடு வழக்கில், தில்லி Rouse Avenue நீதிமன்றம், குற்றச்சாட்டுகளை பதிவு செய்துள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த சிறப்பு நீதிபதி திரு Vishal Gogne இந்த உத்தரவை பிறப்பித்தார்.

<<<<<>>>>>

இந்தியா-ஆஸ்திரேலியா இடையிலான ராணுவ கூட்டுப் பயிற்சியில் பங்கேற்பதற்காக 120 பேர் கொண்ட இந்திய வீரர்கள் பெர்த் நகர் சென்றடைந்துள்ளனர்.

இப்பயிற்சி வரும் 26ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதன்மூலம், இருநாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு மேம்படும் என்று கான்பராவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ஜப்பான் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 11-5, 11-9, 6-11, 11-8 என்ற செட் கணக்கில் எகிப்தின் Haya Ali -யை வென்றார்

---------------

இந்தியாவுக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஃபாலோஆன் பெற்று இரண்டாவது இன்னிங்சை ஆடி வரும் வெஸ்ட் இண்டீஸ் அணி நான்காம் நாளான இன்று சற்றுமுன் வரை 3 விக்கெட் இழப்புக்கு 265 ரன் எடுத்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா தனது முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 518 ரன் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

வெஸ்ட் இன்டீஸ் முதல் இன்னிங்ஸில் 248 ரன் எடுத்திருந்தது.

---------

உலக ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டி குவஹாத்தியில் இன்று தொடங்கியது.

<<<<<>>>>>